# கடலூர்   மாநகராட்சி

## 02.10.2024 அன்று நடைபெற்ற பகுதி சபா கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பகுதிசபா உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகள் விபரம்,

| வார்டு எண் | கோரிக்கைகள் |
|---|---|
| 7 | 1) கேசவன் தோட்டத்தில் வடிகால் வசதி அமைத்து தர வேண்டும்   2) சுந்தரம் நகர் முதல் தெரு இரண்டாவது தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்து தர வேண்டும். 3) பெரப்பன்குட்டையில் சம்ப் தொட்டி, சிமெண்ட் சாலை அமைத்து தர வேண்டும். 4) சிசிடிவி கேமரா வார்டில் உள்ள முக்கிய இடங்களில் பொருத்த வேண்டும். 5) எம்ஜிஆர் நகரில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி மையம் அமைக்க வேண்டும். 6) நியாயவிலைக் கடை அமைக்க வேண்டும். 7) அங்காளம்மன் கோவில் தெருவில் வாய்க்கால் வசதி அமைத்து தர வேண்டும். |
| 9 | 1) புதுஉப்பலவாடி தெருவில் கழிவுநீர் வாய்க்கால் மிகவும் சேதமடைநதுள்ளதை சரிசெய்து தர வேண்டும். 2) பத்மாவதிநகர் மெயின்ரோட்டில் இரண்டு வேகத்தடை அமைக்க வேண்டும். 3) அருந்ததியர் காலனியில் மூன்றாவது தெருவில் சேதமடைந்த சாலையை உடனே சரிசெய்ய வேண்டும். 4) பத்மாவதி நகர் பூங்காவில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்க வேண்டும். 5) கருமாரப்பேட்டை தெருவிலிருந்து உப்பலவாடி மெயின் ரோடில் இணையும் கழிவுநீர் வாய்க்கால் சேதமடைந்துள்ளதை, புதியதாக அமைத்துத் தர வேண்டும். 6) லேத்தம்பேட்டை தெருவில் கடைசி மின்விளக்கு பழுதடைந்துள்ளதை சரிசெய்ய வேண்டும். 7) தெருமுனைகளில் சிசிடிவி கேமரா வைத்து தர வேண்டும். 8) பட்டம்மாள் நகரில் கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட வேண்டும் |
| 12 | 1) அனைத்து தெருக்களிலும் வடிகால் வசதி ஏற்படுத்தி தருதல்   2) ஐந்து லட்சம் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க வேண்டும். 3) பழதடைந்துள்ள சமுதாய கூடத்தை சரிசெய்து தர வேண்டும். 4) ஆரம்ப சுகாதார நிலையம்அமைத்து தர வேண்டும். 5) சாமிப்பிலூளை காலனியில் உள்ள துர்ந்து போயுள்ள   மழைநீர்வடிகாலை பருவமழைக்கு முன்பு மழைநீர் செல்வதற்கு ஏதுவாக தூர்வாரி தரப்பட வேண்டும். 6) பகவந்தன் நகரில் பூங்காவிற்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் புதியதாக பூங்கா அமைத்து தரப்பட வேண்டும். |
| 14 | 1) வண்ணாரப்பாளையம் நான்குமுனை சந்திப்பில் அடிக்கடி பாதாள சாக்கடை பழுது ஏற்படுவதை நிரந்தர தீர்வு காண வேண்டும். 2) மழைநீர் வடிகாலை ஆழப்படுத்தி நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். 3) அங்கன்வாடி பழுதடைந்துள்ளதை சீரமைத்து புதியதாக அமைக்க வேண்டும். 4) பாரதி நகர் பகுதியில் வடிகால் அமைப்புடன் கூடிய சாலை அமைக்க வேண்டும். 5) இப்பகுதியில் உள்ள இரண்டு குளங்களின் சீரமைப்பு பணி முடிவடையாமல் உள்ளதை துரிதமாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். 6) வண்ணாரப்பாளையம் பிரதான சாலை நான்கு முனை சந்திப்பில் இருந்து கேகேஆர் நகர் வரை இருபுறமும் மழைநீர் வடிகால் அமைப்பு கட்டித் தரவேண்டும். 7) இப்பகுதிகளில் விடுபட்ட பகுதிகளுக்கு மின்வசதி அமைத்து தர வேண்டும். |

| | |
|---|---|
| 20 | 1) ராமசாமி தெருவில் சாலைவசதி, மழைநீர் வடிகால் வசதி மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்தி தர வேண்டும். 2) புதுப்பாளையம் பகுதி மின் மயானம் அமைக்க வேண்டும். 3) தெருநாய்கள் திரிவதை கட்டுப்படுத்த வேண்டும் 4) சாக்கடைகளை சுத்தம் செய்யவில்லை 5) ராமசாமி தெரு– காந்தி சிலை அருகே வேகத்தடை அமைக்க வேண்டும். 6) கருமாதி கொட்டகை சீரமைக்க வேண்டும் மற்றும் இந்த இடத்தில் குவியும் குப்பைகளை தினசரி அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 26 | 1) சமுதாயக் கூடம் அமைக்க வேண்டும் 2) மாநகராட்சி மருத்துவ மனையை புதுப்பித்து செயல்பட வைக்க வேண்டும். 3) நியாய விலைக் கடை அமைக்க வேண்டும். 4) வெள்ளிமோட்டான் தெருவில் இருபுறமும் மழைநீர் வடிகால் கட்ட வேண்டும். 5) பாதாள சாக்கடை அடைப்புகளை சீர்செய்ய வேண்டும். 6) தெய்வநாயகம் தெரு மின்னவிளக்குகளை மின்ஒயர் மாற்றி சரிசெய்ய வேண்டும். 7) அமர்ந்தவாழியம்மன் கோவில் அருகில் மின்வசதி இல்லாமல் உள்ளதை ஏற்படுத்தி தர வேண்டும். 8) வெள்ளிமோட்டான் தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை சரிசெய்ய வேண்டும். நான்கு வீடுகள் ஆக்கிரமிப்பில் உள்ளதை அகற்ற வேண்டும். 9) சங்கர நாயுடு தெருவில் மழைநீர்தேங்கா வண்ணம் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டும். |
| 30 | 1) முருகா நகரில் மின்விளக்கு எரியவில்லை, சரிசெய்யப்பட வேண்டும். 2) பாதாள சாக்கடை நீர் நிரம்பிவழிவதை சரிசெய்ய வேண்டும் 3) வள்ளியம்மை நகருக்கு கழிப்பிட வசதி செய்து தர வேண்டும். 4) முருகா நகரில் மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்தி தர வேண்டும். 5) கண்ணகிநகரில் முட்செடிகள் அகற்றப்பட வேண்டும். 6) வண்ணார் வீதியில் ரோட்டோரமாக முள்செடி மற்றும் மணல் குப்பகைள் அதிகமாக உள்ளதை அகற்ற வேண்டும். 7) முருகா நகர் மற்றும் கண்ணகி நகரில் அமைந்துள்ள அங்கன்வாடி மிகவும் சேதமடைந்துள்ளதை புதுப்பித்து தர வேண்டும். 8) வாய்க்கால் சந்தில் அமைந்துள்ள பாதாள சாக்கடை பழதடைந்துள்ளதை சீரமைக்க வேண்டும். |
| 34 | 1) மணவெளியில் பாதாள சாக்கடை இணைப்பு வேண்டும் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டும். 2) வார்டு 34 மணவெளி ஆர்.டி.நகர் மின்விளக்கு வசதி வேண்டுதல் 3) குடிநீர் வசதி வேண்டும் 4) பாலன் காலனியில் பொதுக்கழிப்பிடம் அமைக்க வேண்டும் 5) மணவெளியில் புதியதாக அங்கன்வாடி அமைக்க வேண்டும் 6) சலங்கை நகர் பொதுக்கழிப்பிடம் சரிசெய்து தர வேண்டும். 7) பாலன்காலனி குடிநீர் வசதி செய்ய வேண்டும். |
| 37 | 1) சுனாமி குடியிருப்புகளுக்கு இதுநாள்வரை பட்டா வழங்கப்படவில்லை. 2) சுனாமி குடியிருப்பிலிருந்து மயான கொட்டகை செல்வதற்கு பாலம் அமைத்து தரப்பட வேண்டும். 3) வாடகை கட்டிடத்தில் இயங்கிவரும் நியாயவிலைக் கடையை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டித் தர வேண்டும். 4) முழுமை பெறாத சாலைகளை உடனடியாக முடித்து சாலை அமைத்து தரப்பட வேண்டும். 5) சுனாமி நகர் மெயின் ரோட்டிற்கு மின்விளக்கு வசதி ஏற்படுத்தி தரப்பட வேண்டும். 6) பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்தி தரப்பட வேண்டும். |
| 42 | 1) குயவன்குளம் பகுதியில் சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும். 2) இப்பகுதிக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். 3) மகளிர் உரிமைத் தொகை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். |